# அலகு 2 எனது அற்புதமான உடல்

## எளிய இயக்கங்கள்

**நீங்கள் கற்க இருப்பவை**

- எளிய இயக்கங்கள்
- மூட்டுகள்
- புலன் உறுப்புகளின் பணி
- தோற்ற அமைவு (Posture)
- வளர்ச்சிப் படிநிலைகள்

வேதா, யாஸ்மின், ரீட்டா மூவரும் தோழிகள். அவர்களின் வீடுகள் ஒரே பகுதியில் அருகருகே அமைந்துள்ளன. அவர்கள் மூவரும் எப்போதும் பள்ளி முடிந்தவுடன் ஒன்றாக விளையாடிக்கொண்டே மகிழ்ச்சியாக வீட்டிற்குச் செல்வார்கள். அவர்களுடன் நாமும் செல்வோமா!



அங்கே பாருங்கள்! பச்சை நிறத் தவளை ஒன்று தாவித்தாவிக் குதிக்கிறது. நாமும் தாவிக் குதிப்போமா!



அடடே! காகிதக் குப்பைகளால் இந்த இடம் அசுத்தமாக உள்ளதே! நாம் அவற்றை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுவோமா!



" நாம் வேதா வீட்டருகே வந்துவிட்டோம். அதோ அங்கே பாருங்கள்! நன்கு பழுத்த மாம்பழங்கள். வாருங்கள், நாம் எகிறி குதித்து அவற்றைப் பறிக்கலாம்".



நாளை பார்ப்போமா! என்று கூறி அவர்கள் ஒருவருக்கொருவர் கையசைத்து விடை பெற்றுச் சென்றனர்.



2nd EVS_1st_Term_Text Book_My Body_TM.indd 86 29-12-2019 12:11:16 PM